# Imenius – Educational Service

**Dr. J. Rajakumari**
*Assistant Professor, Department of Advanced Tamil Studies*
*Lady Doak College, Madurai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346714

**Abstract**

*Rev. Imenius Iyer, affectionately called the "Apostle of Nellai," completed his theological training and, hearing the call "Follow Me," traveled to India to carry out his mission. Staying in Thamankampadi, he taught at the Tamil language missionary school. The first school he established was in Vannarpetta, Tirunelveli. Over time, he founded several other schools and continuously provided theological instruction. Imenius's contributions to theology and literature were remarkable. He translated the Bible into Tamil and authored numerous textbooks. Through his schools, he imparted moral values and essential educational instruction, leaving a lasting impression on generations. This study highlights his educational and missionary contributions.*

***Keywords:*** *Gurupattam, Mission, Religious Service, Community Worker, Gurukula Education, Modern Education, Vocational Education, Bible, Mission, Pure Youth.*

**References**

1. J. Gnanadhas Majathinam, Palipidam's Missionary Efforts, p.15
2. Christian Tamil Volunteers, p.173
3. A. Sivasubramanian, Christianity and the Tamil Context, p.54, 2016
4. The Hidden Humans in the Land, United Men's Association, p.39, 25.10.2007
5. Nellai Apostle Imenius, R.S. Jackup, p.26, November 2017
6. The Hidden Humans in the Land, United Men's Association, p.39, 25.10.2007
7. R.S. Jackup, Nellai Apostle Imenius, p.40, November 2017
8. S.A. Weemsing, Do You Know Them?, p.135, 2007

# இரேனியஸ் – கல்விப்பணி

***முனைவர் ஜெ. ராஜகுமாரி***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுநடுவம்
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*நெல்லை அப்போஸ்தலன் என்று அன்புடன் அழைக்கப்படும் அருட்திரு. இரேனியஸ் ஐயர் அவர்கள் இறையியல் பயிற்சி முடித்து "என்னைப் பின்பற்றிவா" என்ற அழைப்பின் சத்தம் கேட்டு இந்தியாவுக்கு புறப்பட்டு வந்தார். தரங்கம்பாடியில் தங்கியிருந்து தமிழ் மொழிக் கற்றுமிஷன் பாடசாலையில் கற்பிக்க ஆரம்பித்தார். இவர் முதன் முதலாக தொடங்கிய பாடசாலை திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் நிறுவப்பட்டதாகும். இன்னும் பல்வேறு இடங்களில் பள்ளிகளை நிறுவி அவ்வப்போது இறையியல் போதனை அருளி வந்தார். இரேனியஸ் அவர்களின் இறையியல் பணியும், இலக்கியப் பணியும் அற்புதமானது. தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பையும், பாடப் புத்தகங்கள் எழுதும் செயலையும் இடையறாது செய்து வந்தார். பள்ளிகள் மூலம் நற்செய்தியையும் தேவையான பாடப் போதனைகளும் கொடுத்து இன்றுவரை அனைவர் மனதிலும் நீங்கா இடம் பெற்ற இரேனியஸ் அவர்களின் பணிபோற்றுதற்குரியது. இவரைப் பற்றிய செய்திகளை இவ்வாய்வில் காண்போம்.*

***திறவுச் சொற்கள்:*** *குருபட்டம், பிரசங்கம், இன்னா, சமுதாய ஊழியன், குருகுலக்கல்வி, நவீனக் கல்வி, தொழிற்கூடம், பிரசுரம், விவிலியம், மிஷன், தூய யோவான்*

### முன்னுரை

சார்லஸ் தியோபிலஸ் இரேனியஸ் பிரஷ்யா நாட்டில் பிறந்தவர். சமயப் பணியுடன் கல்விப் பணியும் புரிந்தவர். 14 வயது வரை மரியன் வெர்டர் நகரிலிருந்த கதீட்ரல் பள்ளியில் கல்வி கற்றார். தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள பெர்லின் சென்றார். 15 மாதங்கள் இறையியல் கல்விபயின்று 1812 ஆண்டு குரு பட்டம் பெற்றார். இவரின் கல்விப்பணி அளவிடற்கரியது அதனை விரிவாகக் காண்போம்.

### நோக்கம்

உயர்ந்தக் கருத்துக்களைத் தெளிந்த நடையில் உணர்த்தும் திறன் அவரிடம் அதிகமாக இருந்தது. கல்வி நிலையங்களையும், எண்ணற்ற நூல்களையும் எழுதியவர். அவரின் கல்விப் பணிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### இரேனியஸ் இந்தியா வருகை

1814ஆம் ஆண்டு ஜீலை மாதம் இரேனியஸ் சென்னை வந்து சேர்ந்தார். அங்கிருந்து தரங்கம்பாடிக்குச் சென்ற இரேனியஸ் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கினார். "ஐந்தே மாதங்களுக்குள் தமிழ் மொழியை வாசிக்கவும், எழுதவும் மட்டுமல்லாமல் அதில் பிரசங்கங்கள் செய்யவும் தகுதி பெற்றவரானார்"[1] (ஜே.ஞானதுரைராஜரத்தினம் பலிபீடத்தின் பணிவிடைக் காரர்கள் ப.எ- 15) என்ற ஞானதுரையின் கூற்று இவர் தம் தமிழ்மொழி கற்றுக் கொள்ளும் ஆர்வத்தினை வெளிப்படுத்துகிறது. தமிழ் மக்களிடம் எளிதில் பழகவும், கருத்துப் பரிமாற்றம் செய்யவும் தாய்மொழி தமிழ் இன்றியமையாதது என்ற காரணத்தினால் தமிழ் மொழியை மிக வேகமாகக் கற்றுத் தேர்ந்தார்.

### பண்பு நலன்கள்

இரேனியஸ் கடமை உணர்ச்சிமிக்கவர். அவர் தம் கடமைகளே அவர் தம் உடமைகளாயின. பருகும் பானமும், உண்ணும் உணவும் ஆயின. காலத்தின் அருமை பெருமையை அறிந்தவர். ஒவ்வொரு அலுவலையும் அதற்கெனக் குறிப்பிட்ட வேளையில் நிறைவேற்றுவார். அவருடைய பொறுமையும், பணிவும் வியப்பிற்குரியவை. இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் இயல்பினர். அறிவாற்றல், மனவுறுதி, உடல்வன்மை முதலியவற்றால் சிறந்தவர். தன்னலத்திற்கு சிறிதும் இடம் கொடாதவர். அவருடைய மதிப்புமிக்க நூல்கள் தமிழர் சமுதாயத்திற்கு “அவர் விட்டுச் சென்ற செல்வமெல்லாம் நல்லபெயர், சமுதாய ஊழியன், தெய்வபக்தி மிக்கவன் திறமை சாலிஎன்றநல்லபெயர்ஆகும்.”[2] (கிறிஸ்தவத் “தமிழ் தொண்டர்கள் - ப.எ -173இ

### இரேனியசின் கல்விப் பணி

இவரது கல்விப் பணி சமுதாய மாற்றத்திற்குப் பெரிதும் வழி வகுத்தது. அக்காலக் கட்டத்தில் குருகுலக் கல்விமுறை இருந்து வந்தது. இம்முறையில் கல்வி உயர்சாதியினருக்கும், உயர்குடியினருக்குமே கிடைத்து வந்தது. இரேனியஸ் இந்நிலையை மாற்றி அமைத்தார். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, கல்வியின் அவசியத்தை அறிந்த இரேனியஸ் மக்களிடையே கல்விப் பணியாற்றி, கல்வி அனைவரும் பெறத்தக்கதே என நிரூபித்தார். “இவரது கல்விப் பணியானது சாதிகளைக் கடந்து அனைவரும் நவீனக் கல்விபயில உறுதுணையாயிருந்தது.”[3] (ஆ.சிவ சுப்பிரமணியன் - கிறிஸ்தவமும் தமிழ்ச் சூழலும் - ப.எ- 54, ப.ஆ- 2016) ரேனியசின் கல்விப் பணி சமுதாயத்தின் அடித்தள மக்கள் பயன்படும் விதத்தில் அமைந்திருந்தது. எனவே பற்பல இடங்களில் பள்ளிக் கூடங்களை நிறுவினார். கல்வி மூலம் சமுதாயத்தில் சிலமாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்.

### கல்விப் பணியின் தீவிரம்

அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த மக்கள் பலர் மூடப்பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர். இவற்றிலிருந்துமக்கள் விடுவிக்கப்பட வேண்டுமாயின் இதற்குக் “கல்வி மிக அவசியம் என்பதை உணர்ந்து பல இடங்களில் பள்ளிகளை ஏற்படுத்தினார். கல்வி என்பது பாமரமக்களையும் சென்றடைய வேண்டும் எனக் கருதினார்”[4] (மண்ணில் புதைந்த மாமனிதர்கள் - வெளியீடு ஆண்கள் ஐக்கியசங்கம் - ப.எ- 39 ப.ஆ- 25.10.2007) அதோடு தொழில் கற்கும் வாய்ப்பும் அளிக்க விரும்பினார். இதனடிப் படையில் கல்விக்கூடம், தொழிற்கூடம், தொழிற்பயிற்சி ஆகியவற்றை முறைப்படி தொடங்கி செயல்படுத்தினார்.

தமிழ்மொழி அறிவு தேவை என்பதை உணர்ந்த இரேனியஸ் அவர்கள் தரங்கம் பாடி சென்று தமிழ்மொழி அறிவுப் பெற்றார். அதுமட்டுமல்ல “கல்வி நிறுவனங்களிலாவது சாதி வேறுபாட்டை வேரோடு கிள்ளி எறிய வேண்டும் என்பதில் உறுதியோடு இருந்தார்.”[5] (நெல்லை அப்போஸ்தலன் - ரேனியஸ் - ஆர்.எஸ். ஜேக்கப் - ப.எ- 26, ப.ஆ நவம்பர் 2017).

### பாடசாலைகள்

இரேனியஸ் அவர்கள் திருநெல்வேலியில் முதலாவது தொடங்கிய பள்ளிக்கூடம் வண்ணாரப் பேட்டையில் 1820ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். இதனைத் தொடர்ந்து பல்வேறு கிராமங்களிலும் பள்ளிக் கூடங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வந்தன. 1822 ஆம் ஆண்டுக்குள் சுமார் 11 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.

19ஆம் நூற்றாண்டில் இரேனியஸ் ஏற்படுத்திய பள்ளிகளில் இன்றைய கல்வி முறைகளுக்கொத்த கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டது. தமிழிலேயே பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடப் புத்தகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன.

இரேனியஸ் பள்ளிகளை ஆரம்பித்து அதனை செயல்படுத்தியதோடு அவ்வப் போது பள்ளிகளில் கல்வியின் தரம் குறித்து மேற்பார்வை செய்யும் ஆட்களைப் பணித்தார். எனவே பள்ளிகள் சிறப்பான முறையில் செயல்பட்டன. "விவிலியம், ஆங்கிலம், தமிழ், கணக்கு, வரலாறு, புவியியல் முதலிய பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன."[6] (மண்ணில் புதைந்த மாமனிதர்கள் - ஆண்கள் ஐக்கிய சங்கம் வெளியீடு ப.எ- 39 ப.ஆ- 25.10.2007)

### கல்விப் பணியின் மேன்மை

எண்ணையும், எழுத்தையும் அறிவதே கல்வி என்ற நிலையை இரேனியஸ் மாற்றி அமைத்தார். இதனால் மாணவர்கள் பலதரப்பட்ட அறிவையடைய அடிகோலினார். ஆழ்ந்து சிந்திக்கவும், ஆய்ந்து தெளியவும் உதவுவதே கல்வியின் நோக்கமாயிருக்க வேண்டும். உண்மையான கல்வியின் நோக்கம் நிறைவேற இரேனியஸ் உழைத்தார். இக்காலத்தில்நடைமுறையில்இருந்துவரும் கல்விமுறையை இந்தியாவுக்குக் கொண்டு வந்து சாதி, நிறம், சமயம், சமுதாயநிலை ஆகியவற்றை வெறுத்து அனைவருக்கும் கல்வி என்கிற நிலையை ஏற்படுத்தியவர்களில் ஒருவர் இரேனியஸ் ஆவார் என்ற கூற்று இரேனியசின் கல்விப் பணியின் மேன்மையைப் புலப்படுத்துகிறது.

### எழுதிய நூல்கள்

இரேனியஸ் பல்வேறு நூல்கள் எழுதி வெளியிட்டபெருமைக்குரியவர். 1830ஆம் ஆண்டு சுவிசேஷச் சமரசம் என்ற பெரிய நூல் ஒன்றை எழுதினார். இவர் எழுதி வெளியிட்ட ஞானோபதேச வினா-விடை சிறியவர்களுக்கும், பெரியவர்களுக்கும் பெரிதும் பயன்பட்டது. வேதாகம சரித்திர வினா - விடை என்ற சிறிய நூலை சென்னையில் இருக்கும் போதே எழுதி வெளியிட்டார். "மாணவர்கள் உலக அறிவு பெறவேண்டும் என்றநோக்கில் வரலாறு, தாவரம், மண்வளம், கனிப்பொருட்கள் பற்றிய பொதுஅறிவு நூல்களையும் எழுதி அச்சிட்டார்."[7] (ஆர்.எஸ். ஜேக்கப் - நெல்லை அப்போஸ்தலன் - ரேனியஸ், ப.எ- 40 ப.ஆ-நவம்பர் 2017)

### இரேனியஸ் மரணம்

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிராமங்கள் எங்கும் சென்று சமயப்பணி, கல்விப்பணி செய்து அநேக பாடசாலைகளை தோற்றுவித்த இரேனியஸ் 1838 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 5 ஆம் நாள் தனது 48வது வயதில் மரணமடைந்தார். அவரது கல்லறை அடைக்கலாப்புரத்தில் தூய யோவான் ஆலயக் கல்லறைத் தோட்டத்திற்கு வெளியே சற்றுத் தள்ளி ஊரின் நடுவில் அமைந்துள்ளது. "இஸ்ரவேலில் ஒருபிரபு இன்று விழுந்தார்."[8] (ஷ. ஏ. வீரசிங் - இவர்களைத் தெரியுமா? ப.எ- 135,ப.ஆ -2007) என்று வந்திருந்த அனைவரும் மகாசத்தமாய் கதறி அழுதார்கள்.

### முடிவுரை

இரேனியஸ் ஐயர் அவர்களின் தெளிந்த கோட்பாடுகளாலும், அர்ப்பண உழைப்பாலும் தமிழ்நாட்டில் புதிய வளர்ச்சிகள் தோற்றம் பெற்றன. தமிழ் மொழிக்குச் சிறப்பாய் தொண்டாற்றிய வீரமா முனிவர், போப், கால்டுவெல் போன்றவர்களுக்கு இணையாக இரேனியஸ் அவர்களும் கருதப்படுகிறார். ஆயராதஉழைப்பு,தமிழ்ப்பணி,கண்டிப்புக் கொண்ட இரேனியஸ் அவர்களின் பணி என்றும் போற்றுதற்குரியதாகும்.

### மேற்கோள் நூல்கள்

1. ஜே.ஞானதுரை ராஜரத்தினம் - பலிபீடத்தின் பணிவிடைக்காரர்கள் ப.எ- 15,
2. கிறிஸ்தவத் தமிழ் தொண்டர்கள் - ப.எ -173

3. ஆ.சிவசுப்பிரமணியன் - கிறிஸ்தவமும் தமிழ்ச் சூழலும் - ப.எ- 54இ ப.ஆ- 2016
4. மண்ணில் புதைந்த மாமனிதர்கள் - வெளியீடுஆண்கள் ஐக்கிய சங்கம் - ப.எ- 39 ப.ஆ- 25.10.2007
5. நெல்லை அப்போஸ்தலன் - ரேனியஸ் - ஆர்.எஸ்.ஜேக்கப் - ப.எ- 26, ப.ஆ நவம்பர் 2017
6. மண்ணில் புதைந்த மாமனிதர்கள் - ஆண்கள் ஐக்கியசங்கம் வெளியீடுப.எ- 39 ப.ஆ- 25.10.2007
7. ஆர்.எஸ்.ஜேக்கப் - நெல்லை அப்போஸ்தலன் - ரேனியஸ், ப.எ- 40 ப.ஆ-நவம்பர் 2017
8. ஷ.ஏ. வீரசிங் - இவர்களைத் தெரியுமா? ப.எ- 135, ப.ஆ -2007